


01.08.2024

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு.நரேந்திரமோடி வியட்நாம் பிரதமர் ஃபாம் மின் ச்சின்-உடன் புதுதில்லியில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

2. இலங்கை கடற்படையின் ரோந்து கப்பல் மோதி ஒரு தமிழக மீனவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக இந்தியா - இலங்கை தூதரிடம் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளது.

3. ஷெடியூல்டு மற்றும் பழங்குடியினர் இடஒதுக்கீட்டில் உள்ஒதுக்கீடு வழங்க மாநிலங்களுக்கு அதிகாரம் உண்டு என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

4. திருச்சி, கரூர், நாமக்கல் மாவட்ட காவிரி ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

5. பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் ஆடவர் 50 மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவில் இந்தியாவின் ஸ்வப்னில் குசாலே தற்போது களத்தில் உள்ளார்.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி வியட்நாம் பிரதமர் ஃபாம் மின் ச்சின்-உடன் புதுதில்லியில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொண்டார்.

இந்த பேச்சுவார்த்தைகளின் ஒருபகுதியாக இருநாடுகளுக்கிடையே முக்கிய ஒப்பந்தங்களும் இன்று கையெழுத்தாயின.

வியட்நாம் பிரதமர் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப் தன்கர் ஆகியோரையும் இன்று சந்தித்து பேச உள்ளார்.

முன்னதாக அவருக்கு குடியரசுத்தலைவர் மாளிகையில் பாரம்பரிய முறையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்றார்.

இதனை தொடர்ந்து வியட்நாம் பிரதமர் புதுதில்லி ராஜ்கட்டில் மகாத்மா காந்தியடிகள் நினைவிடத்திற்கு சென்று அஞ்சலி செலுத்தினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மீனவர்கள்

ராமேஸ்வரம் அருகே நேற்றிரவு நடுகடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்களின் படகு மீது இலங்கை கடற்படையின் ரோந்து கப்பல் மோதியதில் ஒரு மீனவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக இந்தியா - இலங்கை தூதரிடம் தனது கண்டனத்தை முறையிட்டுள்ளது.

இந்த உயிரிழப்பு குறித்து அதிர்ச்சியையும், வேதனையையும் இந்தியா வெளிப்படுத்தியதாக கூறியுள்ள வெளியுறவு அமைச்சகம் இதுதொடர்பாக இலங்கை அரசிடம் இந்திய தூதரகம் எடுத்துரைக்கும் என்று தெரிவித்துள்ளது.

மீனவர்களின் பிரச்சனையை மனிதாபிமான முறையில் அணுக வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி வருவதை சுட்டிக்காட்டியுள்ள அமைச்சகம், இதுதொடர்பாக இரு நாட்டு அரசுகளுக்கிடையே நிலவும் புரிந்துணர்வு, தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்துள்ளது.

இந்திய மீனவர்களின் பாதுகாப்பிற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாக கூறியுள்ள அமைச்சகம், மீனவர்கள் பிரச்சனை குறித்து தொடர்ந்து, இலங்கை அரசிடம் உயர்மட்ட அளவில் வலியுறுத்தப்பட்டு வருவதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

கச்சதீவு அருகே இன்று அதிகாலை மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்களின் படகு மீது, இலங்கை கடற்படை கப்பல் மோதியதில், படகில் இருந்த 4 மீனவர்களில் ஒருவர் உயிரிழந்ததோடு, கடலில் மூழ்கிய மற்றொருவரை தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

2 மீனவர்கள் மீட்கப்பட்டு காங்கேசன் துறைக்கு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் யாழ்பாணத்தில் உள்ள இந்திய தூதரகம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஜல் ஜீவன்

நாட்டில் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் 15 கோடி குடிநீர் இணைப்புகளை மத்திய அரசு வழங்கியிருப்பதாக மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு.சி.ஆர்.பாட்டில் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அவர் குடிநீர் இணைப்புகளுக்கான மின்சார பயன்பாட்டை குறைக்கும் வகையில் சூரிய மின்சக்தியை பயன்படுத்த மக்கள் ஊக்குவிக்கப்படுவதாக கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மசோதா

மக்களவையில் பேரிடர் மேலாண்மை மசோதா 2024–ஐ உள்துறை இணை அமைச்சர் திரு.நித்தியானந்த ராய் இன்று அறிமுகம் செய்தார்.

2005ஆம் ஆண்டு மேலாண்மை சட்ட திருத்தத்திற்கு இது வகை செய்கிறது.

தேசிய மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையங்களை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நோக்கமாக கொண்டு இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேசிய மாநில நிலைகளிலேயே பேரிடர் மேலாண்மை திட்டங்களை தயாரிப்பதற்கான நெறிமுறைகளை வகுக்க இந்த மசோதா வழிகோலுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சசிதரூர்

வயநாடு நிலச்சரிவை இயற்கை பேரிடராக மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு.சசிதரூர் கோரியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதுதொடர்பாக உள்துறை அமைச்சருக்கு தாம் கடிதம் எழுதியுள்ளதாக குறிப்பிட்டார்.

மத்திய அரசு இதனை இயற்கை பேரிடராக அறிவித்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்கு நிதிஉதவி, வழங்கப்படும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

உச்சநீதிமன்றம்

ஷெடியூல்டு மற்றும் பழங்குடியினர் பிரிவின் கீழ் உள் ஒதுக்கீடு வழங்க மாநிலங்களுக்கு அதிகாரம் உண்டு என்று உச்சநீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

தலைமை நீதிபதி னு.லு சந்திரசூட் தலைமையிலான 7 நீதிபதிகள் கொண்ட பெரும்பான்மை அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளது.

அரசு பணியிடங்கள் மற்றும் மாணாக்கர் சேர்க்கையில் ளுஊஇ ளுவு பிரிவினருக்கு உள் ஒதுக்கீட்டை மாநிலங்கள் வழங்கமுடியாது என்று ஆந்திராவில் இ.வி.சின்னையா வழங்கிய தீர்ப்பை ரத்து செய்து உச்சநீதிமன்றம் இந்த உத்தரவை இன்று பிறப்பித்துள்ளது.

முன்னதாக இவ்வழக்கு தொடர்பாக தலைமை வழக்கறிஞர் உள்ளிட்ட மூத்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்ட உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பை ஒத்திவைத்திருந்தது.

அரசியல் சாசனத்தின் 341ஆவது பிரிவின் கீழ் குடியரசுத்தலைவர் பட்டியலில் ளுஊ பிரிவினரை நீக்கும், இணைக்கும் அதிகாரம் மாநில சட்டப்பேரவைகளுக்கு இல்லை என்று ஆந்திர மாநிலத்தில் இ.வி.சின்னையாவின் 2004ஆம் ஆண்டு தீர்ப்பில் வலியுறுத்தியுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மேட்டூர்

கர்நாடக அணைகளிலிருந்து 2 லட்சத்து 20 ஆயிரம் கன அடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளதை அடுத்து ஒகேனக்கல்லில் தற்போது வினாடிக்கு ஒரு லட்சத்து 90 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்துகொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

இந்நிலையில் மேட்டூர் அணையிலிருந்து ஒரு லட்சத்து 70 ஆயிரம் கன அடிக்கு மேல் உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

இதனிடையே வெள்ள தடுப்பு பணிகளை சேலம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.சங்கர் இன்று ஆய்வு செய்தார்.

திருச்சி முக்கொம்பு அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு ஒரு லட்சம் கன அடியாக உள்ள நிலையில் காவிரி மற்றும் கொள்ளிடத்தில் பெருமளவு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

இதனிடையே காவிரி பாயும் 11 மாவட்டங்களில் மாவட்ட கண்காணிப்பு அதிகாரிகள் வெள்ள தடுப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்து வருகின்றனர்.

மக்கள் பாதுகாப்புடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே நாமக்கல் மாவட்டத்தில் காவிரி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 113 வீடுகளில் நீர்புகுந்துள்ளது.

தாழ்வான பகுதிகளில் வசித்த மக்கள் நிவாரண முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி ஆசியா மரியம் தெரிவித்துள்ளார்.

பரமத்திவேலூர் காவிரி கரையோர பகுதிகளில் மீன்பிடிக்கவும், பரிசல் இயக்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி கோவை மாவட்டங்களில் கன மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரக்கோணத்திலிருந்து தேசிய பேரிடர் மீட்பு படையின் 2 குழுவினர் அப்பகுதிக்கு விரைந்துள்ளன.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஈரோடு காவிரி தடை

ஈரோடு மாவட்டத்தில் ஆடி பெருக்கு மற்றும் ஆடி அமாவாசையை முன்னிட்டு வரும் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் ஆறுகளில் இறங்கி புனித நீராட தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் 48 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் துறை கட்டிடங்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் இன்று திறந்துவைத்தார்.

சென்னை தலைமை செயலகத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தணிக்கை துறையில் தெரிவுசெய்யப்பட்ட 782 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 பேருக்கு ஆணைகளை முதலமைச்சர் வழங்கினார்.

தென்னாப்பிரிக்கா, உகாண்டா, மியான்மர், ஆஸ்திரேலியா, ஃபிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட 15 அயலக நாடுகளிலிருந்து வேர்களை தேடி திட்டத்தின் கீழ் தமிழகம் வந்துள்ள 100 அயலக தமிழ் இளைஞர்கள் முதலமைச்சரை இன்று சந்தித்தனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

உதயநிதிஸ்டாலின்

திருச்சி மாவட்டம் அந்தநல்லூர் திருப்பராய் துறையில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் காலை உணவு திட்டத்தை மாநில இளைஞர்நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் இன்று ஆய்வு செய்தார்.

திருச்சி கம்ரசம்பேட்டை அருகே அமைக்கப்பட்டு வரும் பறவைகள் பூங்கா பணிகளை பார்வையிட்டதோடு, முக்கொம்பு மேலணையையும் ஆய்வு செய்தார்.

மாநில அமைச்சர்கள் திரு.கே.என்.நேரு, திரு.அன்பில் மகேஷ்பொய்யாமொழி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கல்வெட்டு

திருப்பூர் மாவட்டம் அழகுமலை ஊராட்சிக்குட்பட்ட கோவில்பாளையம் அருள்மிகு தளிகீஸ்வரர் திருக்கோவிலில் தொன்மையான 9 கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதில் 8 தமிழ் மொழியிலும், 1 கல்வெட்டு வட்டெழுத்து மொழியிலும் இடம்பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கிராந்திகுமார்

வால்பாறையில் மண்சரிவு ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கிராந்தி குமார் பாடி தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் வால்பாறையில் தடுப்பு நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பேரிடர் மேலாண்மை குழுவினர் வால்பாறையில் முகாமிட்டிருப்பதாகவும் கூறினார்.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

ஒலிம்பிக்

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் துப்பாக்கி சுடுதல் ஆடவர் 50 மீட்டர் ஏர் ரைபில் போட்டியில் இந்தியாவின் ஸ்வப்னில் குசலே வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

3 பிரிவுகளையும் சேர்த்து 590 புள்ளிகளை பெற்று வெண்கல பதக்கத்தை அவர் கைப்பற்றினார்.

இதன்மூலம் இந்தியாவிற்கு 3 வெண்கலப்பதக்கங்கள் கிடைத்துள்ளன.

ஆடவர் ஹாக்கி குரூப் பி பிரிவில் இந்தியா தற்போது பெல்ஜியத்தை எதிர்கொண்டுள்ளது.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ